பணத்தைச் செலுத்தவும் பணத்தைப் பெறவும் என்னென்ன வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன என்பனவும் பார்க்கப்படுகின்றன. அவர்கள் கோருகிற தொகுதியிலே, வேறு என்னென்ன வங்கிக் கிளைகள், எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன? அவற்றின் மூலமாக எவ்வளவு பட்டுவாடா, மற்றவைகள் எல்லாம் செய்யப்படுகின்றன என்பதை எல்லாம் கணக்கில் எடுத்து, அந்த வகையிலே நாமும் சிபாரிசு செய்கிறோம். அந்த சிபாரிசை ஒட்டித்தான் ரிசர்வ் வங்கியும் ஆராய்ந்து பார்த்து தக்க முடிவு எடுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில், கிராமப்புறங்களிலே ஐ.ஆர்.டி.பி. லோன் வழங்குகிற போது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 50 சதவிகிதமும், மற்றவர்களுக்கு மூன்றில் ஒரு பங்கும் சப்சிடி அமௌன்ட்டாக அந்த வங்கிகளில் அரசாங்கம் செலுத்துகிறது. சிறிது காலத்திற்கு, அந்தப் பணத்தை அவர்கள் ''ரொடேட்'' செய்து கொண்டு, அதன் பிறகு, பயன்பெறுபவர்களுக்கு அந்தக் கடனைக் கொடுக்காமல், மீண்டும் அந்த சப்சிடி அமௌன்ட்டை திருப்பிச் செலுத்தக்கூடிய நிலைமை இருப்பதை உணர்ந்து, அந்த வங்கிகள் மீது நடவடிக்கை எடுக்க ஏதாவது வழிவகை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமைகளை ரிசர்வ் வங்கியினுடைய கவனத்திற்குத்தான் நாம் கொண்டுவர வேண்டும். அவர்கள் என்ன தக்க கட்டளைகளை இடுகிறார்களோ, அதன்படிதான் அவர்கள் நடக்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். குறைபாடுகள் ஏதாவது இருந்தால், அவர்களுடைய கவனத்திற்கு நாம் கொண்டு வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 462, திரு. வி. கே. லட்சுமணன் இருக்கையில் இல்லை; திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

462—

கோயம்புத்தூர் மாநகராட்சி செல்வசிந்தாமணி குளத்தில் அரசு மருத்துவமனை கட்டுதல்.

*9022—திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 26]

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட செல்வ சிந்தாமணி குளத்தில் மேலும் ஓர் அரசு மருத்துவமனை கட்ட அரசிற்கு உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி என்கிறபோது, இப்போது இருக்கிற பொது மருத்துவமனை, அங்குள்ள மக்களுக்கு மிகவும் தேவையாக இருக்கிறது. இப்போது, அது மாநகராட்சியாக ஆக்கப்பட்டு, பல்வேறு முனிசிபாலிடிகளை அதோடு சேர்த்து இருக்கிறார்கள். குறிப்பாக, சிங்காநல்லூர் முனிசிபாலிடியையும் கூட அதோடு சேர்த்திருக்கிறார்கள். இன்னும் பல்வேறு ஏரியாக்களை எல்லாம், அந்த மாநகராட்சியோடு இணைத்து இப்போது மக்கள்தொகை கிட்டத்தட்ட 10 லட்சத்திற்கும் குறையாமல், அந்தக் கோவை நகரத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ஒரே ஒரு பொது மருத்துவமனை தான் இப்போது இருக்கிறது. அந்த ஒரே ஒரு பொது மருத்துவ மனையில் கூட்டம் அலைமோதுகிறது. தினமும் காலையிலிருந்து மாலைவரை, மக்கள் வெள்ளம்தான் இருக்கிறது. ஆகவே, செல்வசிந்தாமணி குளம் என்பது அந்த நகரத்தினுடைய ஒரு பகுதியாக இருக்கிறது; அந்த செல்வசிந்தாமணி குளத்தில், இப்போது தண்ணீர் வருவதும் கிடையாது; ஆக்கிரமிப்பாளர்களும் அதிகரித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, ஏற்கெனவே நமது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிடம், செல்வசிந்தாமணி குளத்திலே ஒரு பொது மருத்துவமனை கட்டினால் நன்றாக இருக்கும், மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும் என்று சொன்னேன். சென்னையிலேகூட பல்வேறு இடங்களிலே பொது மருத்துவமனைகள் இருக்கின்றன. அதே போல், கோவையில் அது ஒரு மாநகராட்சியாக ஆக்கப்பட்ட பிறகு, 10, 15 ஆண்டுகள் ஆகிவிட்டன.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. கே. பி. ராஜு : அதற்குத்தான் வருகிறேன்.

அது மாநகராட்சியாக்கப்பட்ட பிறகும், அந்த ஒரே ஒரு மருத்துவமனையை வைத்துக் கொண்டு, அங்கு மக்கள் சிரமப் படுகிறார்கள். ஆகவே, செல்வசிந்தாமணி குளம் என்பது, நகரத்தினுடைய மையப் பகுதியாக இருக்கிற காரணத்தினால், ஆக்கிரமிப்பாளர்களும் அங்கு ஆக்கிரமிப்பு செய்து கொண்டு,

அந்த இடம் 'வேஸ்ட்' ஆகப் போய்க் கொண்டிருப்பதால், அங்கே ஒரு பொது மருத்துவமனையைக் கட்டினால் பொது மக்களுக்கு சௌகரியமாக இருக்கும்; அதைக் கட்டுவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை உங்கள் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளத்திலே மருத்துவமனை கட்டுவதிலே வாய்ப்பு இல்லை என்று ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு நேரம் பேசிய காரணத்தினால் அதைப்பற்றி ஆலோசிக்கலாம். வேறு வேறு இடத்திலே மருத்துவமனைகள் தேவையா ; அல்லது அந்த ஒரு மருத்துவமனையே போதுமா என்பதைப் பற்றி ஆலோசிக்கலாமே தவிர, இப்போது ஒரு முடிவை எடுக்க முடியாது. ஏற்கெனவே கூட, நாம் மருத்துவக் கல்லூரி இருக்கிற இடத்திலே சில பிரிவுகளை— சிறப்புப் பிரிவுகளை மட்டும் துவக்கலாமா என்றுகூட ஆலோசித்தோம்.

ஆனால் இன்னும் அதிலே நம்மாலே முடிவு எதுவும் எடுக்க முடியாத அளவுக்கு அது தேவையா இல்லையா என்ற நிலை இருக்கிறது. எனவே, அதற்காக ஒரு தனி கமிட்டி அமைத்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

முற்பகல் 10–10

திரு. கே. பி. ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்விதான் அனுமதிக்கலாம்.

வினா எண் 463, திரு. என். ஆர். சிவபதி, இருக்கையில் இல்லை. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

463—

ஆரம்ப சுகாதார நிலையங்களில் உயிர்காக்கும் மருந்துகள் வாங்க அதிக நிதி ஒதுக்கீடு,

*9328—திரு. என். ஆர். சிவபதி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—